DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT NO.I, ERODE

**S.T.C. No. 16/2024** **Date : 10.02.2025**

**Defence Witness - (DW1)**

**Name** **: ரங்கநாதன்** Caste :

Father's Name : Calling:

Village : Religion:

Taluk : Age :

புகார்தாரர் ஆஜர். எதிரி ஆஜர்.

சாட்சிக்கு சத்தியபிரமானம் செய்விக்கப்பட்டு முதல் விசாரணை

**1.** என் பெயர் ரங்கநாதன். நான் இந்த வழக்கின் எதிரியாவேன். புகார்தாரர் சிவக்குமாரை தெரியும். கடந்த 16.09.2020 தேதி என்னுடைய மனைவி வனிதா பெயரில் இருந்த காலிமனையை ஜானகி என்பவரின் பெயரில் கிரையம் எழுதி வாங்கிக்கொண்டார்கள். ஜானகி என்பவர் புகார்தாரரின் சகோதரி. புகார்தாரர் சிவக்குமாரும் அவருடைய சகோரர் சரவணனும் என் மனைவியை அழைத்து சென்று ஜானகி பெயரில் கிரையம் வாங்கிகொண்டார்கள். நான் 2017-2018ல் ரூ.1 லட்சம் கடன் வாங்கியிருந்தேன். அதற்கு வட்டி சேர்த்து ரூ.1,90,000/- கொடுக்க வேண்டும் என சிவக்குமார் சொன்னார். அந்த பணத்திற்காக இடத்தை எழுதிக்கொடுக்க சொல்லி கேட்டு என் மனைவியிடம் இருந்து எழுதி வாங்கிகொண்டார்கள். அந்த கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். அது **எ.சா.ஆ-1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

Judicial Magistrate,
Fast Track Court No.I,
Erode.

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNED150001992024/truecopy/order-3.pdf

www.ecourtsindia.com

**2.** கடந்த 2017-2018ல் ரூ.1 லட்சம் கடன் பெறும் போது பாதுகாப்பிற்கு 1 காசோலை கையொப்பம் மட்டும் போட்டு கொடுத்திருந்தேன். அந்த கடனுக்க 1 வருடம் வட்டியும் கட்டியுள்ளேன். நான் கொடுக்கவேண்டிய பணத்திற்காக என் மனைவியின் பெயரில் இருந்த இடத்தை 2020ல் எழுதி வாங்கி கொண்டு, தற்போது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளார். எனவே இந்த வழக்கை தள்ளுபடி செய்யும்படி வேண்டுகிறேன்.

(புகார்தாரர்தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது).

**ஒம்/- சாட்சி : ரங்கநாதன்**

**நீதித்துறை நடுவர்,**
**விரைவு நீதிமன்றம் எண்.1,**
**ஈரோடு.**

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNED15000192024/truecopy/order-3.pdf